# பண்டிகை விடுமுறை: மெட்ரோ ரயில்கள் இயங்கும் நேரம் நீட்டிப்பு

**சென்னை, அக்.22:** பண்டிகைக் கால விடுமுறையை முன்னிட்டு, மெட்ரோ ரயில்கள் இயங்கும் நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: மெட்ரோ ரயில்கள் காலை 7 முதல் இரவு 9 மணி வரை இயக்கப்பட்டு வருகின்றன. பண்டிகை கால விடுமுறையையொட்டி, வெள்ளி (அக்.23), சனி (அக்.24) ஆகிய நாள்களில், மெட்ரோ ரயில்கள் இரவு 11 மணி வரை இயங்கும்.